**கவனிக்க.**- *2022.06.17 ஆந் திகதிய 2285 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2286 2022 ජූනි මස 24 වැනි සිකුරාදා 2022.06.24
*2286 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 998 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 999 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2022, யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ருவன்வல்லை பிரதேச சபை

### வீதிகளுக்குப் பெயரிடுதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

*1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வீதிகளுக்குப் பெயரிடுதல் மற்றும் நினைவுச் சின்னங்களை நிறுவுதல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான தேசிய அரச சபைகள் சட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் 2020.10.02 ஆம் திகதிய கடிதம் மூலம் கௌரவ ஆளுனர் அவர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிக்காக முன்மொழியப்பட்டுள்ள " பீ. ஸீ. இம்புலான மாவத்தை" எனும் பெயர் உபயோகிக்கப்படுமென பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

| *தொடர் இலக்கம்* | *பெயரிடப்பட்ட வீதி* | *முன்மொழியப்பட்ட பெயர்* |
|---|---|---|
| *01.* | அங்குருவல்லை - வரகாபொலை வீதியிலிருந்து ஆரம்பித்து இம்புலான - போபெத்த வரை செல்லும் வீதி | பீ. ஸீ. இம்புலான மாவத்தை |

கே. பீ. ரத்னபால பீரிஸ்
*தவிசாளர்*
*பிரதேச சபை,*
*ருவன்வல்லை.*

*06 - 315*

---

## ருவன்வல்லை பிரதேச சபை

### வீதிகளுக்குப் பெயரிடுதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

*1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வீதிகளுக்குப் பெயரிடுதல் மற்றும் நினைவுச் சின்னங்களை நிறுவுதல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான தேசிய அரச சபைகள் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் 2022.03.30 ஆம் திகதிய கடிதம் மூலம் கௌரவ ஆளுனர் அவர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிக்காக முன்மொழியப்பட்டுள்ள "அல்ஹாஜ் யூ. எல். எம். பாரூக் மாவத்தை" எனும் பெயர் உபயோகிக்கப்படுமென பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

| *தொடர் இலக்கம்* | *பெயரிடப்பட்ட வீதி* | *முன்மொழியப்பட்ட பெயர்* |
|---|---|---|
| *01.* | கன்னத்தோட்டை நகரத்திலிருந்து ஆரம்பித்து புலத்கொஹுபிட்டிய வீதியுடன் இணைகின்ற துணை வீதி வரை செல்லும் வீதி | அல்ஹாஜ் யூ.எல். எம். பாரூக் மாவத்தை |

கே. பீ. ரத்னபால பீரிஸ்
*தவிசாளர்*
*பிரதேச சபை,*
*ருவன்வல்லை.*

*06 - 316*

# நானாவித அறிவித்தல்கள்

## பண்டாரவளை மாநகர சபை

*நானாவித கட்டணம் அறவிடுதல் - 2022*

*பண்டாரவளை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் 2022.01.01 ஆந் திகதி முதல் மீள இது தொடர்பில் அறிவிக்கப்படும் வரை பின்வரும் விதத்தில் மாதாந்தக் கழிவு (குப்பை கூழங்கள்) வரியினை அறவிடுதல் பொருத்தமானது என பரிந்துரைக்கின்றேன்.*

*மேற்குறிப்பிட்ட பரிந்துரையானது 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த மகா சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 6.1.1 இன் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

*ஜனக நிஷாந்த ரத்னாயக,*
*மாநகர முதல்வர்,*
*மாநகர சபை பண்டாரவளை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*பண்டாரவளை,*
*2022, சனவரி 01.*

**பண்டாரவளை மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குரிய பின்வரும் இடங்களில் மாதாந்தம் கழிவு (குப்பை கூழங்கள்) வரியொன்றை அறவிடுதல்.**

| | | |
|---|---|---|
| *சுற்றுலாச் சபையினால் அனுமதித்துள்ள ஹோட்டல்களுக்காக மாதாந்தம்* | - | *3,000.00 ரூபாய்* |
| *நாடு பூராகவும் கிளைகளைக் கொண்டுள்ள பல்பொருள் அங்காடிகளுக்காக மாதாந்தம்* | - | *5,000.00 ரூபாய்* |
| *வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்காக மாதாந்தம்* | - | *3,000.00 ரூபாய்* |
| *நாடு பூராகவும் கிளைகளை கொண்டுள்ள வர்த்தக வியாபாரங்கள் கூட்டிணைந்த வியாபாரங்கள் துணைக் கிளைகளுக்காக மாதாந்தம்* | - | *3,000.00 ரூபாய்* |

### மலக்கழிவகற்றல் சேவையினை வழங்குகையில் அறவிடப்படும் கட்டணங்களை திருத்துதல்

*2021.12.10 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2,258 கொண்ட வர்த்தமானப்பத்திரத்தின் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட பண்டாரவளை மாநகர சபையில் நானாவித கட்டணங்களை அறவிடுதலின் கீழ் இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ள மலக்கழிவகற்றல் சேவையினை வழங்குதல் தொடர்பில் வெளியிடப்பட்ட வியாபாரம் மற்றும் வீட்டு வாடகையானது 2022.02.10 ஆந் திகதி முதல் மீள இது தொடர்பில் அறிவிக்கப்படும் வரை திருத்தம் மேற்கொண்டுள்ளதாக 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த மகா சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5.6 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

*ஜனக நிஷாந்த ரத்னாயக,*
*மாநகர முதல்வர்,*
*மாநகர சபை பண்டாரவளை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*பண்டாரவளை,*
*2022, பெப்புருவரி 10.*

| இல. | தற்போது அறவிடப்படும் கட்டணம் (மலக்கழிவகற்றல் சேவை) | திருத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| 01. | எல்லைக்கு அப்பால் - 10,000.00 + 1 Km 100.00 | எல்லைக்கு அப்பால் - 15,000.00 + 1 Km 150.00 வீதம் செல்வதற்கும் வருவதற்கும். |
| 02. | வியாபார நிலையங்கள் (அதிகாரப் பிரதேசத்தினுள்) ரூ. 10,000.00 | வியாபார நிலையங்கள் (அதிகாரப் பிரதேசத்திற்கு அப்பால்) ரூ 15,000.00+ 1 Km 150.00 வீதம் செல்வதற்கும் வருவதற்கும். |

06 - 321/1

---

## பண்டாரவளை மாநகர சபை

நானாவித கட்டணம் அறவிடுதல் - 2022

2021.12.10 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2,258 கொண்ட வர்த்தமானப் பத்திரத்தின் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட பண்டாரவளை மாநகர சபையில் நானாவித சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்களை 2022.03.25 ஆந் திகதி முதல் மீள இது தொடர்பில் அறிவிக்கப்படும் வரை திருத்தம் மேற்கொண்டுள்ளதாக 2022.03.25 ஆந் திகதி நடைபெற்ற விசேட மாதாந்த மகா சபைக்கூட்டத்தில் தீர்மான இலக்கம் 3.1 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜனக நிஷாந்த ரத்னாயக,
மாநகர முதல்வர்,
மாநகர சபை பண்டாரவளை.

மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2022, மாச்சு 25.

01. நீர் பவுசரொன்றை வழங்குதல் தொடர்பில் கட்டணம் அறவிடல்

நகர சபை எல்லைக்குள் மத வழிபாட்டுத்தலங்கள்/மரண வீடுகள் மற்றும் உத்தரக்கிரியைகளுக்காக நீர் பவுசர்கள் இலவசமாக வழங்கப்படும்.

| நீர் பவுசரின் அளவு | அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு தற்போது அறவிடப்படும் கட்டணம் | திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| 6000 லீற்றர் | ரூ. 2,500.00 | ரூ. 3,500.00 |
| 5000 லீற்றர் | ரூ. 2,000.00 | ரூ. 3,000.00 |
| 3000 லீற்றர் | ரூ. 1,500.00 | ரூ. 2,500.00 |

போக்குவரத்து கட்டணம் ஒரு கிலோ மீற்றருக்கு டிரக்டர் பவுசருக்காக ரூபா 100. 00 வும், லொரி பவுசருக்காக ரூபா 220.00 வும், அதற்கு மேலாக பயணம் செய்யும் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் ரூபா 120.00 படியும் கட்டணமாக அறவிடப்படும்.

02. நீர் இல்லாது பவுசர் மாத்திரம் (1 கி. மீ. இற்காக)

| நீர் பவுசரின் அளவு | தற்போது அறவிடப்படும் கட்டணம் | திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| 6000 லீற்றர் | ரூ. 55.00 | ரூ. 75.00 |
| 5000 லீற்றர் | ரூ. 50.00 | ரூ. 70.00 |
| 3000 லீற்றர் டிரக்டர் தாங்கி | ரூ. 45.00 | ரூ. 65.00 |

03. பண்டாரவளை மாநகர சபையின் தகனவறையில் பூதவுடலினை தகனம் செய்வதற்காக கட்டண அறவீடுகள்

| | தற்போது அறவிடப்படும் கட்டணம் | திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| சபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் | ரூ. 5,000.00 | ரூ. 6,000.00 |
| சபை எல்லைக்கு அப்பாற்பட்ட பிரதேசம் | ரூ. 10,000.00 | ரூ. 12,500.00 |

04. தீயணைப்புச் செயற்பாடுகளுக்காக கட்டண அறவீடுகள்

| | தற்போது அறவிடப்படும் கட்டணம் | திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| தீயணைக்கும் வாகனத்தை பணியில் ஈடுபடுத்தல் (இயற்கை அனர்த்தங்களிலும் அரச பிரபுக்கள் வருகைதரும் சந்தர்ப்பங்களின் போது ஒக்கீடு செய்தல் தவிர்ந்த வர்த்தக ரீதியாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் போது தீயணைப்பு வாகனத்தினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்து ஒதுக்கிக் கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கையில் அறவிடப்படும் கட்டணம் | ரூ. 15,000.00 | ரூ. 30,000.00 |
| தீயணைப்பதற்காக வழங்கப்படும் நீர் பவுசரிற்காக | ரூ. 2,000.00 | ரூ. 3,500.00 |

05. சபைக்குச் சொந்தமான மின்பிறப்பாக்கி இயந்திரத்தை (ஜெனரேடர்) வாடகைக்கு கொடுத்தல்.

| | தற்போது அறவிடப்படும் கட்டணம் | திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| நகர மண்டபத்தில் நடைபெறும் உற்சவங்களுக்காக ஒதுக்கிக் கொடுத்தலிற்காக மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்காக கட்டணம் அறவிடுதல் (எரிபொருள் வழங்கி) | 750.00 | பற்றுச் சீட்டு விற்பனையின் மூலம் (வருவாய் ஈட்டும்) நிகழ்ச்சிகளுக்காக மணித்தியாலமொன்றிற்கு ரூ. 10,000)<br><br>வருமானம் ஈட்டலின் மூலம் நடாத்தப்படும் கல்விக் கருத்தரங்குகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளுக்காக மணித்தியாலமொன்றிற்கு ரூ. 5,000.00 |

**விளையாட்டு மைதானத்தினை வழங்குதல் - (வருமானம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நிகழ்ச்சிகளுக்காகவும் நாளொன்றிற்கு)**

| | | |
|---|---|---|
| வெவதென்ன விளையாட்டு மைதானத்தினை வழங்குதல் | - | நாளொன்றிற்கு ரூ.5,000.00 |
| வடக்கு கெபில்லவெல விளையாட்டு மைதானத்தினை வழங்குதல் | - | நாளொன்றிற்கு ரூ.5,000.00 |
| இனிகம்பெத்த விளையாட்டு மைதானத்தினை வழங்குதல் | - | நாளொன்றிற்கு ரூ.5,000.00 |

**ஒலிப்பெருக்கிக்கான கட்டண அறவீடு**

நகரத்தினை சுற்றி பொருத்தப்பட்டுள்ள ஒலிப்பெருக்கிகளுக்காக கட்டணம் - நாளொன்றிற்கு 3,000.00 ரூபாய்

06 - 321/2

---

**பண்டாரவளை மாநகர சபை**

நானாவித கட்டணம் அறவிடுதல் - 2022

2021.12.10 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2,2558 கொண்ட வர்த்தமானியில் IV(ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட பண்டாரவளை மாநகர சபையின் வீதி உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல் தொடர்பில் அறவிடப்படும் கட்டணங்கள் 2022.05.19 ஆந் திகதி முதல் மீள இது தொடர்பில் அறிவிக்கப்படும் வரை திருத்தம் மேற்கொண்டுள்ளதாக 2022.05.19 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த மகா சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 6.1.1 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜனக நிஷாந்த ரத்னாயக,
மாநகர முதல்வர்,
மாநகர சபை பண்டாரவளை.

மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2022, மே 19.

**வீதி உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்**

| | தற்போது அறவிடப்படும் கட்டணம் (ரூ) | திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| பெகோ இயந்திரம் (மணித்தியாலமொன்றிற்கு ரூ.) | ரூ. 2,750.00 எரிபொருளுடன் | ரூ. 2,750.00 எரிபொருள் இன்றி (குறைந்தது 03 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும்.) |
| மோடர் கிரேடர் எரிபொருளுடன் (மணித்தியாலமொன்றிற்கு ரூ.) (குறைந்தது 03 மணித்தியாலங்களாக இருத்தல் வேண்டும் | ரூ. 4,500.00 எரிபொருளுடன் | ரூ. 4,500.00 எரிபொருளுடன் (குறைந்தது 03 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும்.) |

| | தற்போது அறவிடப்படும் கட்டணம் (ரூ) | திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| டொன் 08 வீதி பதனிடும் இயந்திரம் (கல் ரோலர்) | 12,000.00 | ரூ. 2,000.00 எரிபொருள் இன்றி (குறைந்தது 06 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும்.) |

மேற்குறிப்பிட்ட வீதி உபகரணங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்கையில் தேவையான எரிபொருளானது நகர சபையினால் வழங்கப்படுமாயின் வர்த்தகச் சந்தையில் அன்றைய தினத்திற்கு நிலவும் எரிபொருளின் விலையினை கருத்திற்கொண்டு பயன்படுத்தும் எரிபொருளின் அளவின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணத்தினை மாநகர சபைக்கு செலுத்துவதன் பின்னர் உரிய சேவையினை பெற்றுக் கொள்ள முடியும்.

06 - 321/3

---

**மாலிம்படை பிரதேச சபை**

வேறு கட்டணங்கள் - 2022

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் மாலிம்படை பிரதேச சபை வளுப் பிரதேசத்திற்குள் 2022 ஆம் வருடத்தில் வேறு கட்டணங்கள் அறவிடப்படுவதன் கீழ் J.C.B இயந்திரங்களை குத்தகைக்கு விடும் சந்தர்ப்பத்தில் ஒரு மணித்தியாலயத்துக்கான கட்டணம் ரூபா 2100.00 ஆகும் 2021.10.13 ஆம் திகதிய தீர்மான இலக்கம் 5:6 இன் கீழ் மாலிம்படை பிரதேச சபை கருத்துத் தெரிவித்துள்ளது. அக்கட்டணத் திருத்தமானது J.C.B இயந்திரங்களை குத்தகைக்கு விடும் போது ஒரு மணித்தியாலயத்துக்கு ரூபா 5200.00 ஆக அதிகரிக்கச் செய்ய 2022.05.17 ஆம் திகதிய தீர்மான இலக்கம் 6:8 இன் கீழ் மாலிம்படை பிரதேச சபை கருத்துத் தெரிவித்துள்ளது.

சோமசிறி வீரமன்,
தலைவர்,
மாலிம்படை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாலிம்படை,
2022, மே 17.

06 - 349

---

**அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச சபை**

சேவைகளுக்கும் மற்றும் வாடகைக்குமான கட்டண திருத்தம் - 2022

2021.11.26 ஆந் திகதி 2256 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டில் வழங்கப்படும் சேவைகளுக்கு மற்றும் வாடகைக்கான கட்டண அறவீடு திருத்தத்திற்காக அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச சபையினால் 2022.03.25 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தின் போது இல. 8.1 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபை அங்கீகரிக்கப்பட்டதென பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

காமினி வீர பத்தன,
தவிசாளர்,
அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அங்குனகொலபெலெஸ்ஸ,
2022, மாச்சு 25.

**தீர்மானம்**

*2022, மாச்சு 25 ஆந் திகதியிலிருந்து தகனம் செய்வதற்கான சுடலைக்கட்டண அறவீடு மீண்டும் திருத்தப்பட வேண்டுமென அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை**

| இல. | விபரம் | ரூ. |
|---|---|---|
| 01. | தகனம் செய்வதற்கான சுடலைக் கட்டணம் | |
| | * பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குட்பட்டவை | ரூபா 15,000.00 |
| | * பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்கு வெளியே | ரூபா 17,000.00 |

06 - 366